# நிலப்பிரபுத்துவத்தில் தமிழிசையின் நிலை

By

**ஜென்ஸிஸ் குமார், மி.**

*உதவிப்பேராசிரியர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*இசை மண்ணோடும், மக்களோடும், வாழ்வோடும் இணைந்தது என இசையியல் வல்லுநர்கள் கூறுவார்கள். இவை மூன்றும் உலகளாவிய பொதுமை என்றாலும், அந்தந்த பிரதேசங்கள் ஊடகத் தனித்துவம் பெறுவதைக் காணமுடியும். அந்த வகையில் தமிழ் இசையும் தனக்கெனத் தனித்துவத்தைக் கொண்டுள்ளமையை நம்மால் உணர முடியும். காலத்தால் தொன்மையான தமிழிசை இன்று வழக்கிழந்து, இல்லாமல் போனது மிகப்பெரிய இழப்பாகும். இந்த இசையின் அழிவு அதனோடு மட்டும் நின்று விடாமல் இசைக் கருவிகளையும், அதனை உருவாக்கும் தொழில் நுட்பங்களையும் நம்மிலிருந்து அன்னியப்படுத்தி விட்டது. தொடக்கக் காலத்தில் இயற்கையோடு இணைந்திருந்த தமிழிசை கால மாற்றத்தில் குறிப்பாக நிலப்பிரபுத்துவம் வலிமை பெற்ற காலத்தில் இறைவனுடன் இணைக்கப் பெற்றதால் ஏற்பட்ட சுருங்கிய வெளிப்பரப்பும், பிற மேலை நாட்டு இசைக்கருவிகளின் வருகையால் ஏற்பட்ட செல்வாக்கிழப்பும் தமிழிசையின் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணிகளாயின என்பதை இக்கட்டுரை முன் வைக்கிறது.*

***கலைச்சொற்கள்:*** *மிருதங்கம், தெள்ளேணம், முழவு, தொண்டகப்பறை, தட்டைப்பறை.*

## முன்னுரை

தமிழ் ஆய்வு உலகம் அழிந்து வரும் பழங்கலைகளை மீட்டெடுப்பதிலும், எஞ்சி நிலைத்த கலைக்கூறுகளைப் பாதுகாப்பதிலும் பெரும் கவனம் செலுத்தி வருகிறது. அம்முயற்சியைத் தமிழிசைக் கலையிலும் செலுத்த வேண்டியது கட்டாயக் கடமையாகும். இல்லையேல், தமிழாய்வு விளைதக்க பயனை விளைவிக்காது என்பது உறுதி.

தமிழ் இனிமையானது, இசையும் இனிமையானது, இரண்டின் இனிமையும் ஒன்றுபடும் சூழலில் எத்தகைய இன்பம் பிறக்குமோ அத்தகைய உயர்ந்த இன்பம் தமிழிசைக்கு உண்டு. தமிழிசை காலத்தால் மிகத் தொன்மையானது. அது எந்நாளில் தோன்றி வளர்ந்து முதிர்ந்தது என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது. பல நாடுகளுக்கு இசை பற்றிய அறிவே இல்லாத காலத்தில் தமிழர்கள் இசையின் நுட்பத்தை ஆழமாகத் தெரிந்து வைத்திருந்தனர் என்பதனை பழமையான தமிழ் இலக்கியங்களின் பதிவுகள் மூலம் உணர முடிகிறது. தமிழகம் இழந்துள்ள அரியவகை கலைச்செல்வங்களுள் இசைக்கலை முக்கியமான ஒன்றாகும். இசைக்கலை அழிவதோடு இசைக்கருவிகளும் வழக்கிழந்து இல்லாமல் போய்விட்டன. சான்றாக மிருதங்கஇசை அழிந்ததோடு மிருதங்கத்தை உருவாக்கும் தொழில் நுட்ப முறையும் அழிந்து வருவதைக் குறிப்பிடலாம்.

## மனித வாழ்வில் இசையின் பங்கு

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை இசை இயைந்ததாகவே காணப்படுகிறது. மனித வாழ்வின் இன்ப துன்பங்களை அவன் இசை வழியே எதிர் கொள்கிறான். அழும் குழந்தை தாலாட்டுக் கேட்டே தூங்குகின்றது. அது போல் மகிழ்வு தரும் நிகழ்வுகளிலும் இசையையே முன்னிறுத்துகின்றனர். ஆண், பெண் விளையாட்டுக்களிலும் இசை இருந்திருக்கின்றது. பெண்களின் விளையாட்டான கொற்றி, பிச்சு, சித்து, சிந்து, அம்மானை, பந்து, கழங்கு, உந்தி, தோள்வீச்சு, தெள்ளேணம் போன்றவற்றை இசையுடன் கூடிய பாடல்களோடு தான் விளையாடுவர் என தமிழ் இலக்கியக் குறிப்புகள் பதிவு செய்துள்ளன. மேலும் தொழில் களங்களில் சாந்து இடிக்கும் போதும், நாற்று நடும் போதும், களை எடுக்கும்

போதும், காடுகளில் தினைப்புலம் காவற் காக்கும் வேளையிலும் நாட்டுப்பாடல்களை இயைந்த இன்பத்தோடு இசையுடன் பாடி மகிழ்ந்துள்ளனர். ஆண்கள் ஏற்றம் இறைக்கும் போதும், ஓடம் தள்ளும் போதும், வண்டி ஓட்டும் நேரங்களிலும் நாட்டுப்பாடல்களை இசை கலந்து பாடி சுமையை இலகுவாக்கி களைப்பைப் போக்கியுள்ளனர். பொல்லா விலங்குகளை வசப்படுத்தவும் இசையை பயன்படுத்தியுள்ளனர். இசை ஆறறிவு மனிதனை மட்டுமின்றி விலங்குகளையும் மரம், செடி, கொடிகளையும் ஈர்க்கும் ஆற்றலுடையதை தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

## இலக்கியங்களும் : இசைக்குறிப்புகளும்

தமிழ் இலக்கியங்களில் இசையோடு இசைக்கருவிகள் குறித்த தரவுகளும் காணக் கிடைக்கின்றன. இந்நூல்களில் பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், பஞ்சமரபு, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கல்லாடம் போன்றவை இன்றியமையாதவையாகும். சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, ஊர்சூழ்வரி காதை, குன்றக்குரவை போன்றவை இன்றும் பெரும் இசை அரண்காளாக விளங்குவதைக் காணலாம்.

## தொல்காப்பியத்தில் இசைக்குறிப்பு:

இசை தமிழர் வாழ்வோடு இரண்டரக் கலந்திருந்ததை தொல்காப்பியமும் சுட்டிச் சென்றுள்ளது. தொல்காப்பியர் கருப்பொருளைக் குறிப்பிடும் போது யாழினையும் பறையினையும் பதிவு செய்துள்ளார். யாழ் குறித்த இலக்கண நூல் இருந்தமையை,

"அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளபென மொழிப இசையோடு சிவணிய
யாழின் மறைய என்மனார் புலவர்"

(தொல். எழுத்து.33)

எனும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். மேலும் இசையையும், கூத்தையும் கொண்டு வாழ்க்கை நடத்திய பாணன், பாடினி குறிப்புகளும் காணக் கிடைக்கின்றன. செவி உணர் ஓசைகளில் தனித்து உணர்வதற்குரிய இசைக்கருவி ஓசைகள் என்ற தொல்காப்பிய இசைக் கோட்பாடே இடம் பெற அடிப்படையாக உள்ளது.

"தெய்வம் உணாவே மாமரம் புள்பாறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"

(தொல். பொருள்.964)

இக்கருப்பொருள் பட்டியலில் நுகர்ச்சிக்கு உரியவையாகக் கொள்ளத்தக்கவை உணவு, பறையொலி, யாழிசை ஆகியன. உணவு உடலுக்கும், பறையும் யாழும் உயிர்பண்பாகிய மனதிற்கும் ஆக்க ஆற்றலை எனப் பிரித்து அறியும் போது ஐம்பொறி நுகர்ச்சியின் செவியுணர்விற்குத் தனி இடம் இருப்பது புலனாகிறது.

"ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே"

(தொல். பொருள். மரபியல். 1526.5)

இவ்வாறு செவியுணர்வும் ஒரு உணர்வாகி பிற உணர்வுகளுக்கு உணர்வுப் பெருக்கியாகவும் அமைவதை அறியலாம். இத்தகைய இசை உணர்வோடு கூடிய அடிப்படையான செய்திகளைத் தொல்காப்பியம் நுட்பமுடன் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளது.

## சங்க இலக்கியத்தில் இசைக் குறிப்புகள்

சங்க இலக்கியத்தில் ஐந்திணைப் பாகுபாடாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களில் நிகழும் வாழ்க்கை முறையில் உரிப்பொருளுக்கு ஏற்பவும் செய்தொழிலுக்கு ஏற்பவும் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளமை பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறிஞ்சி நிலத்தில் காணப்படும் இசைக்கருவி வகைகளுள் தோற்கருவிகளே மிகுதியும் குறிக்கப் பெற்றுள்ளன. தோற்கருவிகளுள் தலையாயது முழவு. ஆடவரின் திரண்ட தோளுக்கு இது உவமையாகக் கூறப்பட்டது. ஒரு புறம் மட்டுமே இயங்கக்கூடிய தோற்கருவி பதலையாகும். இதனை

"பதலை ஒரு கண் பையென இயக்குமின்"

(புறம். 152.17)

எனப் புறநானூறு சுட்டுகிறது.

குறிஞ்சி நிலத்தோர் பயன்படுத்திய பறை தொண்டகப்பறை. கிளிகள் ஓட்டவும் கூத்தாடவும் இதனை முழக்குவர். முழவோடு சேர்ந்து இசைக்கப்படடுவது ஆகுளி என்னும் இசைக்கருவி. இதன் ஓசை ஆந்தையின் குரல்போல் இருந்ததாக மலைபடுகடாம் குறிப்பிடுகிறது. திணைப்புனத்தில் கிளி ஓட்டுவதற்கு பயன்படுத்திய கருவி ‘தட்டை’ ஆகும். தேரையானது தட்டைப் பறையைப் போல் ஒலித்ததை

“பகுவாய்த் தேரை தட்டைப் பறையின்
கறங்கும் நாடன்” (குறு. 193)

எனக் குறுந்தொகை கூறுகிறது.

இப்படி வாழ்க்கையின் விளக்கமாக அமையும் ஐந்திணை நிலை போக்கில் இசைக்கருவிகள் பெற்றிருந்த இடத்தைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

இவ்வாறு தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் மட்டுமின்றி அதன் பின் வந்த காப்பிய இலக்கியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் இசைக் குறிப்புகளோடு இசைக்கருவிகள் குறித்த தரவுகளும் பெரும்பான்மை கிடைக்கின்றன.

சங்க காலத்தில் இசை இயற்கையை ஒட்டி இருந்தது. ஆனால், காலமாற்றம் இசையிலும் மாற்றத்தை தோற்றுவித்தது. இயற்கையோடு இயைந்திருந்த இசை நிலப்பிரபுத்துவம் வலிமை பெற்ற காலத்தில் இறைவனோடு இணைக்கப்பெற்று இறைமயமாயிற்று. அதோடு கோயிலில் பணிபுரிந்த தேவரடியார்களோடு இணைந்து அவர்களுக்கு உயர் சமூக மதிப்பை பெற்றுத் தந்தது. இசையின் வளர்ச்சிக்கு தேவரடியார்களின் பங்கு இன்றிமையாதது. இச்சூழலில் பிற நாட்டு இசைக்கருவிகள் தமிழகத்தில் பரவியதால் தமிழிசைக் கருவிகள் கோயிலுக்குள் முடங்கிக் கொண்டன. அதோடு தமிழிசையும் தன் செல்வாக்கை இழக்க நேரிட்டது.

**முடிவுரை**

நம் மொழியின் பழமையைப் போல தமிழிசையும் பழமையானது என்பதை அறிய முடிந்தது. தமிழின் தொன்மையான இலக்கியங்களான தொல்காப்பியம், சிலப்பதிகாரம், சங்க இலக்கியம் போன்றவற்றில் இசைக்குறிப்புகள் அதிகமாகப் பதிவாகியுள்ளன. தமிழன் வாழ்வில் தாலாட்டிலிருந்து ஒப்பாரி வரை ஒவ்வொரு பருவத்திலும் இசை ஒரு முக்கிய கூறாக இருந்துள்ளது. பழங்காலத்திலிருந்தே இசைக்கு முன்னுரிமை தரப்பட்டே வந்துள்ளது. தமிழிசையின் வடிவங்களும் பல. இவ்வாறு சிறப்புற்றிருந்த தமிழிசை கால ஓட்டத்தில் வேற்றுமொழி ஆதிக்கத்தால் குறிப்பாக நிலப்பிரபுத்துவத்தின் காலத்தில் பெரும் சரிவை சந்திக்க நேர்ந்தது. அதிலும் மேலை நாட்டு இசைக்கருவிகளின் வருகையால் பெரும் வீழ்ச்சிக்கு உள்ளானதை இக்கட்டுரைகளின் மூலம் உணர முடிகிறது.

**பார்வை நூல்கள்**


சுப்ரமணியன். ச. வே., தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், 9/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 108, 1998, பக்.36.

மேலது., பக். 358.

மேலது., பக். 590.

பிரேமா. இரா., சங்க இலக்கியம் புறநானூறு, 141, உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை 017, 1999, பக். 184

பிரேமா. இரா., சங்க இலக்கியம் குறுந்தொகை, 141, உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை 017, 1999, பக். 168.

## To cite this article

*****************

Jencis Kumar, M. (2022). நிலப்பிரபுத்துவத்தில் தமிழிசையின் நிலை. *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 5*(4), 6-9.

*************************************************************************************

## ABOUT THE AUTHOR



***Dr. Jencis Kumar, M.*** *working as an Assistant professor, Department of Tamil, University College, Thiruvananthapuram, Kerala. He got Ph.D in M.S. University on the Topic : Cettiyarkalin Kudippeyerchium Cittur Agamanakulu Uruvakkamum" He has published ten articles in UGC Referred Journals.*

*************************************************************************************